IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.105/2021

Deposition of Witness for P.W.17

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.R.செந்தில் குமார். |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | காவல் ஆய்வாளர், வேலூர் மது விலக்கு அமலாக்கப் பிரிவு வேலூர். |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.11.2025.

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது வேலூர் மது விலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில், காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 18.01.2021 தேதி நான் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் மருத்துவர் விடுப்பு முடித்து அன்று காலை பணிக்கு அறிக்கை செய்து வேலூர் வடக்கு காவல் நிலைய குற்ற எண்.26/2021 சட்ட பிரிவு 174 கு.வி.மு.சா மாற்றம் பிரிவு 302, 201 வழக்கு கோப்பினை நான் பார்வையிட்டு எனது முதல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டு பின்பு இவ்வழக்கு கோப்பினை பார்வையிட்டதில் 4 வது எதிரி பரசுராமன் என்பவர் கைது செய்யாமல் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருகிறார் என தெரியவந்தது. பின்பு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 18.01.2021 தேதி காலை 09.00 மணிக்கு வேலூர் நருவி மருத்துவமனை அருகேயுள்ள கார் டெக்கார் கடை அருகே இருந்தவரை அடையாளம் கண்டு கைது செய்வதற்கான காரணம் கூறி பின்பு சாட்சிகள் ரஞ்சித் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஜீவரத்தினம் கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்

வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து பின்பு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்துச் சென்றால் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மறைத்து வைத்திருந்த இருசக்கர வாகனத்தை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதன் பேரில் வேலூர் தென்றல் நகர் குப்பை மேட்டிடம் மேற்படி இரு சாட்சிகள் முன்னிலையில் இருசக்கர வாகனம் TN-23CK-7895 TVS Zest சிவப்பு கலர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் அடைந்து எதிரி திரேக சோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்தேன். பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.21 ஆகும். பின்பு 28.02.2021 தேதி இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட வேலுவின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த உதவி பேராசிரியர் மருத்துவர் திரு. நாகேந்திர குமார் அவர்களை விசாரணை செய்து பிரேத பரிசோதனை மற்றும் இறுதி கருத்துரை பெற்று அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அதே தேதியில் இவ்வழக்கின் சாட்சிகள் திரு.ஜேம்ஸ் அந்தோனி ராஜ் துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் வேலூர் அவர்களையும் முதல் நிலை காவலர் திரு.ஸ்டாலின் ஜபராஜ் அவர்களையும் உதவி ஆய்வாளர் திரு.ராஜசேகர் அவர்களையும், வட்டாட்சியர் திரு.ரமேஷ் அவர்களையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையை முடித்து இயக்குநர் குற்ற வழக்கு தொடர்பு அவரின் கருத்துரையை பெற்று சட்டப் பிரிவு கு.வி.மு.சா.174 ல் இருந்து இ.த.ச. பிரிவு 302, 201 என இருந்ததை சட்டப் பிரிவுகள் 147, 148, 302, 201 உ/இ 302 இ.த.ச. என இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த பிரிவு மாற்றம் அறிக்கை அ.த.சா.ஆ.22.

<u>குறுக்கு விசாரணை-</u> எதிரிகள் தரப்பு இளம் வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் JJB Board வழக்கில் விசாரணையில் இருப்பதால் மதியம் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்குமாறு கோரினார்.

மீண்டும் 04.45 மணிக்கு மூத்த வழக்கறிஞர் இன்று விசாரணை செய்ய இயலவில்லை என தெரிவித்ததால் குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் செய்யப்படவில்லை எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 14.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.14 18:11:19 +0530

Additional District Judge(FTC),
Vellore